**கவனிக்க.-** *2014.10.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1887 - 2014 ඔක්තෝබර් මස 31 වැනි සිකුරාදා - 2014.10.31

*1887 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1670 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1679 |


**கவனிக்க.-** *2015 ஆம் நிதி ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2014, செத்தெம்பர் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, மார்கழி மாதம் 1 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஒற்றோபர் 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | வறக்காப்பொலை | ஒத்தரப்பற்று பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பெலிகல் கோறளை பிரிவின் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கேகாலை |

10-1115

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, மார்கழி மாதம் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஒற்றோபர் 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவளை | மருதானை பிரதேசத்தின் களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

10-1116

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, மார்கழி மாதம் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஒற்றோபர் 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | இப்பலோகம | கலகம் கோறளை வடக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கலகம் பலாத பிரிவின் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

10-1117

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மொனராகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, மார்கழி மாதம் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஐப்பசி 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மொனராகலை | மெதகம | நன்னபுராவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மெதகம பிரிவின் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மொனராகலை |

10-1118

---

## அரசாங்க தகவல் திணைக்களம்

அரசாங்க திரைப்படப் பிரிவில் பணிப்பாளர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளல்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரசாங்க திரைப்படப் பிரிவில் பணிப்பாளர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக் கொள்வதற்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்த அறிவித்தலில் "செயலாளர்" என்ற சொல் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரைக் குறிக்கும்.

2. **நேர்முகப் பரீட்சை**.- நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினம் அரசாங்க சேவை ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும்.

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பகுதிகள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 45 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 30 |
| மேலதிக தொழில்சார் அனுபவம் | 20 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

3. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை**.- அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரசாங்க திரைப்படப் பிரிவில் பணிப்பாளர் பதவிக்கு (ஒப்பந்த அடிப்படையில்) 1 வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. **நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி**.- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புக்களுக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்**.- அரச சேவையில் நியமனம் சம்பந்தமாக கடைப்பிடிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும் 2013.06.27 ஆந் திகதிய அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரசாங்க திரைப்படப் பிரிவில் பணிப்பாளர் பதவிக்கு (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளும் விதிமுறைக்கென இயற்றப்பட்ட சட்டங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்படியான இணைத்துக்கொள்வதற்கான விதிமுறைகளில் அல்லது பின்பு இயற்றப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்ட விதத்தில் தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி அரசாங்க தகவல் திணைக் களத்தின் அரசாங்க திரைப்படப் பிரிவில் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

6. தமக்கு வழங்கப்பட்ட பதவிக்கான பொறுப்பை குறிப்பிட்ட தினத்தில் பொறுப்பேற்க முடியாமல் போனவிடத்து அல்லது நியமனம் வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை பொறுப்பேற்க மறுத்தாலோ அல்லது விலகிப் போனாலோ விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச்செய்ய அரச சேவை ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

7. **மாதாந்தக் கொடுப்பனவு**.- ரூபா 30,000 ஆகும்.

8. **தகைமைகள்**.- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று,

(i) *கல்வித் தகைமைகள்*.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலோ அல்லது பட்டப்படிப்பை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினாலோ வழங்கப்பட்ட பட்டதாரி சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும் ;

(ii) *தொழில்சார் தகைமைகள்*.- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா பாடநெறியில் சித்தி யெய்தியிருத்தல் மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும் ;

(iii) *அனுபவம்*.- திரைப்பட இயக்குனராக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஒரு வருடமாவது பணியாற்றி அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) *உடற்தகைமைகள்*.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கை யில் தேவைப்படும் பிரதேசத்தில் சேவையாற்றவும், பதவியின் கடமை நிமித்தம் பணியாற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக இயலுமானவராக இருத்தல் வேண்டும் ;

(v) *வேறு தகைமைகள் :*

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த பண்பாளராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவியில் இணைத்துக்கொள்வதற்கான சகல தகைமை களும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9. **வயது**.- குறைந்தபட்சம் 30 வருடங்கள் ; அதிகபட்சம் 55 வருடங்கள்.

10. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திலுள்ள விதத்தில் ஏ4 (A4) அளவுத்தாளில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாக கருத்தில் கொள்ளவேண்டும். விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்ட சகல தகவல்களும் தமது கையெழுத்துக்களால் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவிதத்தில் இல்லாத விண்ணப்பப்படிவமும், பூரணமான தகவல்களை வழங்காத விண்ணப்பப்படிவமும் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ

பிரதியை தம்முடன் வைத்திருத்தல் உபயோகமாக இருக்கும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி விசாரித்து உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி இல்லாவிடில் அந்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக்கூடும்.

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில், ''வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சு, ''அசி திசி மெதுர'', இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05'' என்ற விலாசத்திற்கு 2014.11.28 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக, ''அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரசாங்க திரைப்படப் பிரிவில் பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளல்'' என்ற சொற்களைக் குறிப்பிடுதல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) சகல விதத்திலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் மற்றும் தாமதமாதல் சம்பந்தமான எந்த முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

11. விண்ணப்பதாரி சமர்ப்பித்த தகவல்கள் தெரிந்துகொண்டே தவறாக சமர்ப்பித்திருப்பதாக தெரியவந்தாலும், அல்லது ஏதாவது முக்கிய தகவல்களை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏதாவது வித்தியாசம் அல்லது முரண்பாடு இருந்தால் சிங்கள மொழியையே சரியானதாகக் கொள்ள வேண்டும்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது ஒழுங்குவிதிகள் இருந்தால் அது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சரித்த ஹேரத்,
செயலாளர்,
வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சு.

வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சு,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
பொல்ஹேன்கொட,
கொழும்பு 5,
2014, ஒற்றோபர் 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் (அரசாங்க திரைப்படப் பிரிவில்) பணிப்பாளர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளல்**

1. தோற்றும் மொழி மூலம் :
   சிங்களம் - 1
   தமிழ் - 2
   ஆங்கிலம் - 3
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2. தனிப்பட்ட விபரங்கள் :

2.1 முதலெழுத்தை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : Mr./Mrs./Miss :----.

(உ-ம் : SILVA, A. B.)

2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 தனிப்பட்ட விலாசம் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.5 ஆணா/பெண்ணா ? ஆண் - 0
பெண் - 1
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.6 விவாகமானவரா ? /விவாகமாகாதவரா ?
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.7 இனம் :
(சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, ஏனையவர்-5)
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.9 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

2.10 தொலைபேசி இலக்கம் (இருந்தால்) :

3. கல்வித் தகைமைகள் :

| பல்கலைக் கழகம் | பெற்ற பட்டம் | பட்டதாரியென வழங்கப்பட்ட திகதி | பாடநெறி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4. தொழில்சார் தகைமைகள் :----.

5. அனுபவம் :----.

6. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை யெனவும் பிழையற்றவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10-1167

## தொழில், தொழில் உறவுகள் அமைச்சு

### சுருக்கெழுத்தாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

தொழில், தொழில் உறவுகள் அமைச்சில் ஆங்கில மொழி மூல சுருக்கெழுத்தாளர் வகுப்பு III பதவிக்கான வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின்கீழ் வருகின்ற தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற எழுத்து மற்றும் தொழில் தகைமைப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டு, தகுதி ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

3. **வேதன அளவுத்திட்டம்.**- பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (IV) இன்படி MN-1-2006 (அ) ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - 22,040 ரூபா ஆகும்.

நான்காவது படி நிலைக்கு முன்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சை.

4. **சேவை நியதிகள் :**

4.1 இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரியதுமாகும் என்பதுடன், விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத் திற்கு பங்களிப்புச் செய்தலும் வேண்டும். இந்தப் பதவி மூன்று வருட (3) தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைவானதாகும்.

4.2 7/2007 ஆம் இலக்க 2007.05.28 ஆந் திகதியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை நியதிகளின்படி சேவையில் ஈடுபட்டு 5 வருட காலப்பகுதிக்குள் சேவையில் ஈடுபடுகின்ற மொழி தவிர்ந்த ஏனைய அலுவலக மொழி/ மொழிகளில் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.3 தாங்கள் கொழும்பு 5, தொழில் செயலகத்தில், 2 ஆவது மாடியில் அமைந்திருக்கின்ற தொழில், தொழில் உறவுகள் அமைச்சிற்காகப் பணியாற்றுதல் வேண்டும்.

5. **தகைமைகள் :**

5.1 விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

5.2 விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் திகதியன்று 18 வயதினை அடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன், 30 வயதிற்கு மேற்படாதிருத்தலும் வேண்டும் ;

5.3 நன்னடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும் ;

5.4 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உடல், உள ரீதியில் தகுதியான வராகவும், நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கு, சேவையாற்றுவதற்கு இயலுமையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

5.5 கல்வித் தகைமை :

(i) முதல் மொழி (சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்) மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் ஏதேனும் பாடங் களில் இரண்டு (2) திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையை சித்தியடைந் திருத்தல் ;

அத்துடன்

(ii) க. பொ. த. உயர் தரத்தில் ஆகக்குறைந்தது ஒரு பாடமேனும் (பொது அறிவுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.6 தொழில்சார் தகைமைகள்.- உயர் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றி னால் நடத்தப்பட்ட சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டெழுத்து (6 மாத) சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்துப் பாடத்தில் திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- உயர் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட சுருக்கெழுத்து மற்றும் கணினி தட்டெழுத்திற்கான நிறுவனங்கள் பின்வருமாறு :

* தொழில்நுட்ப, கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் வருகின்ற தொழிற்றுறை கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள்.
* பயிற்சி அதிகார சபையின் தேசிய பயிலுநர் நிறுவகத்தின்கீழ் வருகின்ற பயிற்சி நிலையங்கள்.
* தேசிய இளைஞர் சபையின்கீழ் வருகின்ற பயிற்சி நிலையங்கள்.
* இலங்கை வாழ்க்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின்கீழ் வருகின்ற பயிற்சி நிலையங்கள்.

5.7 அனுபவம்.- பதவியுடன் தொடர்புடைய ஆறு மாத (6) கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடைமுறை**.- ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது, எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சையினைக் கொண்டிருக்கின்றது. முதலில், எழுத்துப் பரீட்சை நடத்தப்படும் என்பதுடன், இந்த வினாத்தாளில் 40% இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளே தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை :

| வினாத்தாள் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|
| பொது அறிவு மற்றும் கட்டுரை | 100 | 2 மணித்தியாலங்கள் |

தொழில்சார் பரீட்சை :

| விடயம் | புள்ளிகள் |
|---|---|
| சுருக்கெழுத்து மற்றும் கணினி தட்டெழுத்து (ஆங்கிலம்) - செய்முறை | 100 |

(i) பொது அறிவு மற்றும் கட்டுரை (ஆங்கிலம்).- உள்நாட்டு, சர்வதேச சமகால நிகழ்வுகள் தொடர்பான அறிவினைப்

பரிசீலித்தல், சமகாலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தரப்பட்ட தலைப்புக்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட தலைப்பொன்றினைத் தெரிவுசெய்து கட்டுரை எழுதுதல் (குறித்த கருத்துக்களைச் சமர்ப்பித்தல், மொழித்திறன், சரியான இலக்கணம் மற்றும் எழுதும் விதம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும்.)

(ii) சுருக்கெழுத்துக்களை மற்றும் கணினித் தட்டெழுத்து (ஆங்கிலம் - செய்முறை).- ஐந்து (5) நிமிடத்தில் சுருக்கெழுத்துப் பந்தியை நிமிடமொன்றிற்கு 80 சொற்கள் என்ற வேகத்தில் தொடர்ச்சியாக வாசித்தல் மற்றும் இந்த சுருக்கெழுத்துப் பந்தியை நிமிடத்திற்கு 7 சொற்கள் என்ற வேகத்தில் சாதாரண மொழியில் எழுதுதல்.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- இது ஒரு போட்டிப் பரீட்சை ஆகையால் விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள தற்போதிருக்கின்ற வெற்றிடங்கள் பெறப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கின் அடிப்படையிலேயே நிரப்பப்படும். (இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளும் நிறைவேற்றப்படுதல் அவசியமாகும்.)

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 350 ரூபாவாகும். கூறப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைத் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பெயரில் இலங்கை வங்கி, நுகேகொடைக் கிளையில் 0071451995 என்ற இலக்கக் கணக்கில் வைப்புச்செய்து வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியைத் தங்களுடன் வைத்துக்கொள்வது பயனுள்ளது.

9. **விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல்** :

9.1 இந்த அறிவித்தலில் இருக்கின்ற மாதிரிப் படிவத்திற்கமைவாக ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்துதல் வேண்டும் :

(அ) 1 முதல் 3 ஆம் பந்திகள் வரை முதல் பக்கத்திலும், ஏனைய பகுதிகள் மற்றப் பக்கத்தில் வரும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், உரிய தகவல்கள் சொந்தக் கையெழுத்தில் தெளிவாக நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) உரிய மாதிரிப் படிவத்துடன் இணங்காத, உரிய காலப் பகுதியில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் முழுமையாக உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத, முழுமைபெறாத விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் முன்னறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்களினால் விண்ணப்பதாரிகளே பாதிப்பிற்குள்ளாவார்கள். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை தங்களுடன் வைத்துக்கொள்வது நன்மை பயக்கும் என்பதுடன் விண்ணப்பதாரிகள், பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பப்படிவமானது அறிவித்தலில் இருக்கின்ற மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் இணங்குகின்றதா என்பதைக் கண்டறிதல் வேண்டும். அன்றேல் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்.

9.2 இந்தப் பரீட்சை 2014, நவெம்பர் மாதத்தில் நடத்தப்படும் ;

9.3 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, உரிய தகைமைகளை உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நிறைவுசெய்துள்ள, உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள மற்றும் கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற அறிவித்தலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவரையும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிப்பார். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அட்டையை வழங்குதல், இந்தப் பதவிக்கான முன்தகைமையாகக் கருதுதலாகாது. இங்கே காணப்படுகின்ற ஏதேனும் விபரங்கள் வர்த்தமானி அறிவித்தலின்படி பிழையானது அல்லது தவறானது என்று கண்டறியப்பட்டால் பரீட்சார்த்த நிலை இரத்துச்செய்யப்படும்.

9.4 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் முறை.- உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2014.11.21 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத்தபால் மூலம் பணிப்பாளர் அதிபதி, தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், இல. 267, பன்னிப்பிட்டி வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைக் கொண்டிருக்கின்ற தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில், தொழில் உறவுகள் அமைச்சு, சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2014" என்று குறிப்பிடுதல் வேண்டும். காலதாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் தபாலில் அனுப்புகின்றபோது தவறுகின்ற விண்ணப்பப் படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

9.5 விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர், வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற பதவியை வகிக்கின்ற பொலிஸ் சேவை அலுவலர், வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற பதவியை வகிக்கின்ற அரச சேவை அலுவலர் அல்லது அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் பதவி வகிக்கின்ற அலுவலர் மற்றும் ஆண்டொன்றிற்கு 2,40,360 ரூபாவினை விஞ்சிய திரட்டிய வேதனத்தைப் பெறுகின்ற ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.- விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்கையில் சரியான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்குகள், ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி விண்ணப்பதாரி தகைமையற்றவராகக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ பரீட்சார்த்தி நிலை செல்லுபடியற்றதாக்கப்படும். நியமனத்தின் பின்னர் இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரம் பிழையானது, தவறானது என்று கண்டறியப்பட்டால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பொறுப்பாவார்.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சை நடைபெறவுள்ள திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டைகளைப்

பெறும் வகையில் அவை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியினால் விநியோகிக்கப்படும். அத்தகைய அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் அனைவரும் தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையைப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகளை விநியோகித்ததன் பின்னர் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் பத்திரிகை அறிவிப்பொன்றினைப் பிரசுரிக்கும் பத்திரிகை அறிவிப்பினை வெளியிட்டு 2 அல்லது 3 தினங்களில் அனுமதி அட்டையினை நீங்கள் பெற்றிருக்காவிட்டால் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திற்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்திற்காகச் செலுத்திய பற்றுச்சீட்டினதும், பதிவுசெய்யப்பட்டதற்கான பற்றுச்சீட்டினதும் சான்றுப்படுத்திய போட்டோப் பிரதியுடன் உங்களது விசாரணையை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் மேற்கொள்வது முக்கிய மானதாகும்.

11. விண்ணப்பதாரியின் அடையாளத்தைச் சரி பார்ப்பதற்காக பின்வருகின்ற ஆவணங்களில் ஒன்றினைப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

12. பரீட்சையை நடத்துவது தொடர்பில் தேசிய தொழில் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு, ஒழுங்குவிதிகளுக்கு அனைத்துப் பரீட்சார்த்திகளும் அமைவானவர்கள். இந்த ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மீறப்பட்டால், தேசிய தொழில் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியினால் விதிக்கப்படுகின்ற ஏதேனும் தண்டனைக்கு தாங்கள் பொறுப்பாவீர்கள்.

13. இந்தப் பரீட்சையை நடத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம், நியமனங்களை வழங்குதல் மற்றும் பிற வேறு விடயங்கள், தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளருக்கு உரித்தளிக்கப் படுகின்றது.

**குறிப்பு.**- இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடு காணப்பட்டால், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சு,
தொழில் செயலகம்,
2 ஆவது தளம்,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**தொழில், தொழில் உறவுகள் அமைச்சு**

சுருக்கெழுத்தாளர் (வகுப்பு III) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

The Open Competitive Examination for the Recruitment to the Post of Stenographer (Grade III) in the Ministry of Labour and Labour Relations - 2014

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
உ-ம் : PERERA A. B. C.)
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (தமிழ் மொழியில்) :----.
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
1.5 பால் :
ஆண் - 1
பெண் - 0 [ ]
(உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் குறிப்பிடவும்)

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (தமிழ் மொழியில்) :----.
2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :
(i) தமிழ் மொழியில் :----.
(ii) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

2.4 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :
திருமணமானவர் - 2
திருமணமாகவில்லை - 1 [ ]
(உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் குறிப்பிடவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.3 விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

3.4 பரம்பரையாக அல்லது பதிவின் மூலம் நீங்கள் இலங்கைப் பிரசை ஒருவரா ? :----.

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :

(i) ஆண்டு :----. மாதம் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :

(i) ஆண்டு :----. மாதம் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

5. தொழில்சார் தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | காலம் | நிறுவனம் |
|---|---|---|
| | | |

6. ஏதேனும் குற்றத்திற்காக சட்ட நீதிமன்றத்தில் நீங்கள் குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கின்றீர்களா ? :

ஆம் ☐ இல்லை ☐

ஏதேனும் குற்றத்திற்காக சட்ட நீதிமன்றத்தில் நீங்கள் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால், அதற்கான காரணம் ? :----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலங்கை வங்கிக் கிளையின் பெயர் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :
இலக்கம் :----. திகதி :----.
(iii) செலுத்தப்பட்ட தொகை :----.

| பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும். |
|---|

8. **விண்ணப்பதாரியின் சான்றுப்படுத்தல் :**

(அ) விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மையானவையும், சரியானவையுமாகும் என்பதை நான் இத்தால் வெளிப்படுத்துவதுடன், தெரிவிக்கப்படாத மற்றும்/அல்லது தவறான தகவல் காரணமாக ஏற்படுகின்ற ஏதேனும் பாதகத்திற்கு நான் பொறுப்பாவேன் என்பதை இத்தால் ஏற்றுக்கொள்கின்றேன். மேலும், இத்தால் தரப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் சரியானவை என்பதை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) பரீட்சையை நடத்துவது தொடர்பில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைவாக செயற்படுவதற்கு நான் இணங்குவதுடன், இந்த நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவராகக் காணப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது பரீட்சார்த்தி என்ற நிலையை தகுதியற்றதாக்குவதற்கு எடுக்கப்படுகின்ற தீர்மானத்தினை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

(இ) என்னால் செய்யப்பட்ட வெளிப்படுத்தல் உண்மையற்றது அல்லது தவறானதென்று இந்தப் பதவிக்கு நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் மற்றும் அத்தகைய நிலைமை நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால், எதுவித நட்டஈட்டுக் கொடுப்பனவுமின்றி நான் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

(ஈ) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள எந்தத் தகவலிலும் பின்னர் நான் மாற்றம் எதனையும் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல் :**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி .......................................... என்பவரை நான் அறிவேன் என்றும், இவர் என் முன்னிலையில் ................................ ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டுள்ளாரென்பதையும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
சான்றுப்படுத்துகின்ற அதிகாரியின்
கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

சான்றுப்படுத்துகின்ற அதிகாரியின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

10-1178

---

## திருத்தம்

### கல்வி அமைச்சு

அரச பாடசாலைகளில் காணப்படும் மேலைத்தேய சங்கீத ஆசிரிய வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவைக்கு மேலைத்தேய சங்கீத ஆசிரியர்களை ஆட்சேர்த்தல் - 2014

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1880 ஆம் இலக்கம் கொண்ட 2014.09.12 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட "அரச பாடசாலைகளில் காணப்படும் மேற்கத்தேய சங்கீத பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவைக்கு மேற்கத்தேய சங்கீத பாட ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2014" என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 1.2.1 ஆம் வாசகம் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு மறுசீரமைக்கப்படுகின்றது :

1.2.1 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மேற்கத்தேய சங்கீதப் பாடம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்.

இதன் ஊடாக விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி 2014.11.15 ஆந் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

10-1180

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

நாடு பூராகவும் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தில் சிவில், பொறிமுறை, மின்சாரம் (கனதி மற்றும் இலகு) மற்றும் இரசாயன பொறியியலாளர் ஆகிய தொகுதிகளைச் சார்ந்த பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுகின்ற மையினால், அதற்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களுக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "நிறைவேற்றுத் தர சேவைத் தொகுதியின் III ஆம் தரத்தின் இலங்கை பொறியியலாளர் சேவையின் பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முடிவுத் திகதி 2014.12.01 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான ஆவணம் தபாலில் காணாமற் போனமை தொடர்பாக தாமதமாகச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு பரீட்சார்த்திகளே பொறுப்பேற்றல் வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

1.1 திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக குறித்த பாடப் பரப்புக்களின்கீழ் தொழில்சார் தகைமைபெற்ற பொறி யியலாளர்கள் மட்டும் இணைத்துக்கொள்ளப்படுவர். பரீட்சார்த்திகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கு முறைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, பதவிக்கான தகைமைகள் பூர்த்திசெய்யப் பட்டுள்ளனவா என பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் நியமனம் வழங்கப்படும். நியமன நடைமுறைத் திகதி மற்றும் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை அரசாங்க ஆணைக்குழு வின் மூலம் தீர்மானிக்கப்படும். ஒரு சில வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது முழுமையான வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

2. **சேவை நிபந்தனைகள் :**

2.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1836/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அரச சேவை நியமனங் களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை பொறியியலாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட் டுள்ள நியமங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதும், வருங்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், அரச சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் கீழ்ப்பட்டு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படுவர்.

2.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

2.3 இந்நியமனமானது மூன்று வருட நன்நடத்தைக் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். மேற்படி மூன்று (3) வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

2.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 இற்கு அமைய அடுத்துள்ள மொழியில் 5 ஆண்டுகளினுள் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர் ஒருவர், 3 ஆண்டு காலப் பகுதிக்குள் ஒரு அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன், அடுத்த அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியை 6 ஆண்டுகாலப் பகுதியினுள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். I ஆம் தொகுதிக்குரிய இரண்டாவது அரச கரும மொழி தொடர்பாக தேர்ச்சி மட்டத்தைப் பெறல் வேண்டும்.

2.5 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப்பிரமாணங் களுக்கும், திணைக்களத்தின் பிற கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

2.6 நியமனம் பெற்றவர்கள், இந்நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

2.7 நியமனம் பெற்றவர்கள், அரசாங்க சேவை போன்றே மாகாண அரசாங்க சேவையிலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்பட்டவர் களாவர்.

2.8 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது நழுவுகின்ற பரீட்சார்த்திகளின் நியமனங்களை இரத்துச்செய்ய இடமுண்டு.

*3. **சம்பள அளவுத் திட்டம்**.-* இப்பதவிக்கு, பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/2006 ஐக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கமைய SL- 1-2006, ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (மாதாந்தம்) ஆன சம்பளத் திட்டம் உரித்துடையதாகும்.

எவ்வாறாயினும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில், பூரண தொழிற் தகைமைகள் (பட்டயப் பொறியியலாளர் நிலை) பெற்றுள்ள அல்லது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் பொறியியலாளராக பூரண தொழிற் தகைமைகளைப் பெறும்போது அவ்வலுவலர் சேவையின் III ஆம் தரத்தின் ஆறாவது (6) சம்பள படி நிலையில் அமர்த்தப்படுவர்.

**4. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

4.1

4.1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அவ்வாணைக்குழு மற்றும் இலங்கைப் பொறியியலாளர் நிறுவனம் ஆகியவற்றில் அங்கீகரிக்கப் பட்டுள்ள முழுமையாக 4 ஆண்டுகாலத்தைக் கொண்டமைந்த விஞ்ஞானமானி பொறியியல் பட்டப் படிப்பிற்கு இணைத்துக்கொள்ளப்படும் விடயப் பரப்பின் கீழ் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

4.1.2 மேலே 4.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் படிப்பிற்கு சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைப்பாடுகளும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற விடயப் பரப்பின்கீழ் பூர்த்திசெய்து அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.2 *தொழிற்றகைமைகள் :*

4.2.1 இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து அதற்குரிய அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தகைமை பெற்றுள்ளமை பற்றி உறுதிப்படுத்துவதற்கு அந்நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**5. வயதெல்லை :**

5.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5.2 எவ்வாறாயினும், 2013.11.11 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைந்துகொண்ட அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப அலுவலர் ஒருவருக்கு (அதாவது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் உதவியாளர் சேவைக்குரிய பொறியியலாளர் உதவியாளர் (முன்னர் தொழில்நுட்ப உதவியாளர்) அல்லது புகையிரதத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவி வகிக்கும் அலுவலர் அல்லது ஏனைய அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் பணி புரியும் இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய நியமன அதிகாரியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகுதிபெற்ற தொழில்நுட்ப அலுவலர்) உச்ச வயதெல்லை 45 ஆகும்.

**6. தேகாரோக்கியம் :**

6.1 எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லாவிதத்திலும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**7. பிற தகைமைகள் :**

7.1 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

7.2 விண்ணப்பதாரர் சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

7.3 மேலே 4 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு உரிய சான்றிதழ் வழங்குவதற்கு காரணியாயமைந்த பூரண விபரங்களடங்கிய பெறுபேற்று ஆவணங்களில் (Academic transcript) அடங்கியுள்ள பாடங்கள், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சேவைத் தொகுதியின் தேவைப்பாடுகளுடன் எல்லா வகையிலும் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

7.4 ஏதேனும் சமயப் பிரிவொன்றின் போதகராகப் பதவி வகிக்கும் ஒருவர் விண்ணப்பிப்பதற்குத் தகைமைபெற மாட்டார்.

7.5 மேலே இல. 5.2 இன்கீழ் தகைமை பெறும் தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் தமது சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியளவில் அச்சேவையில் உடன் முன்னரான 5 ஆண்டு கால திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.6 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனைத்துத் தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**8. எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை :**

8.1 *எழுத்துமூலப் பரீட்சை :*

8.1.1 இப்பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

8.1.2 மேற்படி 4 இல் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பொறியியலாளர்களின் ஆட்சேர்ப்பு வரிசையை உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்கில் இத்தரப் பரீட்சை நடைபெறும்.

8.1.3 விடயப்பரப்பு.- மேற்படி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் விஞ்ஞான கற்கையின் மூலம் விண்ணப்ப தாரியின் பகுப்பாய்வுத் திறன் மற்றும் தீர்மான மெடுக்கும் திறன் என்பவற்றை ஆராய்வதை நோக்காகக் கொண்டு இப்பரீட்சை 100 புள்ளிகளைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சையினால் வரையறுக்கப் படுகின்றது. வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன் அது தொடர்பாக 1 1/2 மணித்தி யாலம் வழங்கப்படும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

8.2 நேர்முகப் பரீட்சை :

8.2.1 பரீட்சார்த்திகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் ஒழுங்கு முறைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

8.2.2 இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் மற்றும் அதற்கிணங்க பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதா என்பது பற்றி பரிசீலிப்பது மற்றும் தேகாரோக்கியமும் பரிசீலனைக்குட்படுத்தப் படும்.

8.2.3 இதன்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

8.2.4 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப் படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் தகைமை பரிசீலிக்கப்படும்.

8.2.5 பரீட்சார்த்தியினால் நேர்முகப் பரீட்சையின்போது குறித்த சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவ்வனைத்து ஆவணங்கள்/சான்றிதழ்கள் எல்லாவிதத்திலும் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். உரிய அதிகாரியின் தழுவல் அங்கீகாரத்தின்கீழ் சமர்ப்பிக் கப்படுகின்ற எந்தவொரு ஆவணமும்/சான்றிதழ் களும் செல்லுபடியாகாது.

8.2.6 பல பரீட்சார்த்திகள் சம அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பின், அவ்வாறான சந்தர்ப்பங்களில், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகுந்த தீர்மானம் எடுக்கப்படுவதுடன், அதுவே இறுதித் தீர்மானமாகும்.

9. **பரீட்சை நிபந்தனைகள்** :

9.1 பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9.2 பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். அதனை விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்ட செயலகத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்காகச் செலுத்த வேண்டும். மாவட்டச் செயலகத்திலிருந்து/பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

9.3 பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

9.4 பரீட்சை கொழும்பில் நடாத்தப்படுவதுடன், பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

9.5 முழுமையான தகவல்கள் அடங்கப்பெறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- நுழைவுச்சீட்டு இன்றி பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட நுழைவுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பரீட்சார்த்தி ஒருவருக்கு நுழைவுச்சீட்டு வழங்கப்படுவது என்பது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என கருதப்படலாகாது.

9.6 விண்ணப்பப்படிவம், இவ்வறிவித்தலுடன் இணைக்கப் பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைய வேண்டு மென்பதுடன், அது A4 அளவுடைய தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். 1 தொடக்கம் 5 வரையிலான கூடுகள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 6 தொடக்கம் 7 வரையிலான கூடுகள் இரண்டாம் பக்கத்திலும், 8 தொடக்கம் 11 வரையிலான கூடுகள் மூன்றாம் பக்கத்திலும், 12 ஆம் கூடு நான்காம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப் பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

தன்னால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம், இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரர் தாமே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்துப்போகாத மற்றும் முழுமை

யற்ற விதத்தில் தகவல் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதி ஒன்றைக் கைவசம் வைத்திருப்பது பயனுள்ள தாகும்.

9.7 விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படாததுடன், பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை தொடர்பான நுழைவுச்சீட்டு வெளியிடப்பட்டதுடன் உடனடியாக அது தொடர்பாக பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் நுழைவுச்சீட்டு கிடைக்கப்பெறவில்லையாயின், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையைக் கொண்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியிலோ அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் பரீட்சை நுழைவுச்சீட்டுக்கள் வழங்கப்படும். பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வெளியிடப்பட்டவுடனேயே அதுபற்றி குறிப்பிடப்பட்டு பத்திரிகை விளம்பர மொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் தினத்துக்கு ஆகக்குறைந்தது 5 நாட்களுக்கு முன்னரேனும் நுழைவுச்சீட்டு கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது, பரீட்சார்த்தி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், பரீட்சார்த்தியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சார்த்தி கொழும்பிலிருந்து வெளியே வசிப்பவரெனில், அத்தகவல்களுடன் தொலைநகல் (Fax) மூலம் பரீட்சை நுழைவுச்சீட்டின் பிரதியொன்றைத் துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு, பரீட்சார்த்தியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் விடுக்கப்பட்ட கடிதமொன்றையும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் (Fax) இலக்கத்துக்கு அனுப்பிவைத்து விசாரித்தறிவது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரித்தறியும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் அறிந்துகொள்ளக்கூடிய எந்தவொரு விடயம் சம்பந்தமாகவும் உறுதிப்படுத்திக்கொள்வது தொடர்பாக தம்வசம் வைத்துள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக்குச் செலுத்தப்பட்டதன் பின்னர் பெற்ற பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை தபாலிடும்போது பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பனவற்றைத் தயாராக வைத்திருப்பதானது இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

9.8 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சையை காலந்தாழ்த்துதல் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு உரித்தான தாகும்.

9.9 பரீட்சை நடத்துவது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறும்போது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட நேரிடலாம்.

9.10 பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

**குறிப்பு** :

(அ) விண்ணப்பத்துடன் எவ்வித கடிதமோ, அதன் பிரதியோ இணைக்கப்படலாகாது ;

(ஆ) வேண்டுகோள் விடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

அரசாங்க சேவையின்/மாகாண அரசாங்க சேவையின், அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களினால் தத்தமது திணைக்களங்கள்/நிறுவகத் தலைவர்களின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து பரீட்சார்த்திகளும் விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை நுழைவுச்சீட்டுப் படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்ப மானது அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர் 2,40,360 ரூபா ஆண்டுச் சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய அரசின் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை அலுவலரொருவர் அல்லது பௌத்த மத வழிபாட்டுத் தலமொன்றின் விகாராதிபதி அல்லது தலைமை தேரர் அல்லது ஏனைய மத வழிபாட்டுத் தலங்களின் மதப்போதகர் ஆகிய யாரேனும் ஒருவரால் சான்றுப்படுத்த வேண்டும்.

10. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகள், காலத்துக்குக் காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நிறைவேற்றுத் தர சேவைத் தொகுதியின் III ஆம் தரத்திற்கு உரியதான சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் ஆகியன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

11. பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் பெறுபேறு வெளியிடுவதற்கு உரிய தினம் அறிவிக்கப்பட்டதன் பின்னர், எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்றுச் சீட்டினைப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் அனைவருக்கும் அனுப்புவதற்கு பரீட்சைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**இலங்கை பொறியியலாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014**

Open Competitive Examination for Recruitment Engineers to the Grade III of the Sri Lanka Engineering Service - 2014

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

| | |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

விண்ணப்பிக்கும் குழு :

| | |
|---|---|
| குடியியல் | 1 |
| இயந்திரவியல் | 2 |
| மின்சாரம் (கனதி மற்றும் இலகு) | 3 |
| இரசாயனவியல் | 4 |

(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1. பெயர் :

1.1 முதல் எழுத்தை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
உதாரணம் : Mr. GUNAWARDHANA, M.G.B.S.K.

1.2 முதலெழுத்துக்களினால் குறிப்பிடும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி) : ----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

2.2 அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

2.3 தொலைபேசி இலக்கம் :
நிலையானது :----.
கையடக்கத் தொலைபேசி :----.

2.4 தபால் நகரம் :----.

2.5 மின்னஞ்சல் :----.

3. பால் (ஆண்/பெண்) :
(ஆண்-0, பெண்-1)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5. 5.1 இன வர்க்கம் :
(சிங்களம்-1/தமிழ்-2/இந்தியத் தமிழ்-3/முஸ்லிம்-4/ஏனையவை-5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

5.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் :
(திருமணமாகாதவர்-1, திருமணமானவர்-2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

5.3 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

5.4 விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாளன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. 6.1 கல்வித் தகைமைகள் :

(i) பட்டம் அல்லது வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் வலிதுடையதாகும் திகதி :----.

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.

(iii) பதிவு இலக்கமும் திகதியும் :----.

(iv) பட்டக் கற்கைநெறியின் பெயர் (உதாரணம்- விஞ்ஞானப் பொறியியலாளர் BSc Engineering)

(v) கற்கைநெறி : (உதாரணம்- குடியியல், எந்திரவியல், மின்னியல், இரசாயனவியல்) :----.

(vi) பட்டம் அல்லது வர்த்தமானப் பத்திரிகையின் 4.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்த ஆண்டு :----.

(vii) இறுதியாண்டின் பாட விடயங்கள் :----.

(viii) பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

6.2 உயர் தொழில் தகைமைகள் பெற்றிருப்பின் (உதாரணம் : MICE, MIE) :----.

7. இப்போது வகிக்கும் பதவியும் முன்னர் வகித்த பதவியும் இருப்பின் அது பற்றிய விபரம் : (சேவையில் சேர்ந்த திகதியும், அகன்ற திகதியும் மற்றும் ஒதுங்குவதற்கான காரணங்களும் குறிப்பிடப் படுதல் வேண்டும்.

7.1 பதவி :----.

7.2 திணைக்களம்/நிறுவனம் :----.

7.3 நியமனத் திகதி :----.

7.4 நிரந்தரமானது/ஓய்வூதிய உரித்துடையது/ஓய்வூதியம் அற்றது அல்லது தற்காலிகமானதா எனும் விபரம் :----.

7.5 பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா எனும் விபரம் :----.

7.6 பதவியின் சம்பள அளவு, இப்போது கிடைக்கும் சம்பளமும் : ----.

7.7 முன்பு வகிக்கப்பட்ட பதவி பற்றிய விபரங்கள் :----.

7.8 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமோர் பதவியினை வகிக்கும்போது நீங்கள் ஏதேனும் குற்றவியல் தவறுகளுக்காக எப்போதாயினும் நீதிமன்றத்தில் குற்றவாளியாகியிருக் கின்றீரா ? :----.
அவ்வாறாயின் அக்குற்றம் மற்றும் கிடைத்த தண்டனை பற்றிய விபரங்களைத் தருக :----.

8. ஏதேனுமோர் குற்றவியல் தவறுக்காக எப்போதாவது நீதிமன்ற மொன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் அக்குற்றம் மற்றும் கிடைத்த தண்டனை பற்றிய விபரங்களைத் தருக :----.

9. பணப்பற்றுச்சீட்டு அகலாத விதத்தில் ஒரு பக்கத்தில் (one side) நல்ல முறையில் ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்) :----.

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
திகதி :----.

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இவ்விண்ணப்பப்படிவத்தில் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதும் விபரம் உண்மையற்றது என அல்லது பிழையானவையென நான் தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப்பட முடியுமெனின் அதன் காரணமாக நான் இப்பதவிக்குத் தகுதியற்றுப் போவதற்கும், இப்பதவிக்கு நான் நியமிக்கப்பட்ட பின்னர் அத்தவறு கண்டுபிடிக்கப்படின் எந்தவிதமான இழப்பீடுமின்றி நான் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும், பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகவும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும் நான் கீழ்ப்படிவேன் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்** (வர்த்தமானி அறிவித்தலின் 9.10 இன்படி இருத்தல் வேண்டும்.) :

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ........................................ என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் ..................... ஆந் திகதியன்று அவரது கையொப்பம் என் முன்னிலையில் வைக்கப்பட்டதென்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தினை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

12. **விண்ணப்பதாரர் அரச சேவையில் உள்ளவரெனின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் (முழுப்பெயர்) ................................ என்பவர் நான் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரென்றும் ............. ஆந் திகதியன்று அவரது மாதிரிக் கையொப்பத்தை என் முன்னிலையில் வைத்தார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

மேலே 6 ஆம் பந்தியில் உத்தியோகத்தரின் தற்போதைய சேவை தொடர்பாக தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும் அவரின் பணிகளும் நடத்தையும் .................................... என்றும் நான் உறுதி செய்கின்றேன். இப்போது வகிக்கும் பதவியில் இருந்து அவர் விடுவிக்கப்பட முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

கையொப்பம் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம்
உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)
திகதி :----.

10-1113

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

நில அளவைத் திணைக்களம்

நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கை தொழில்நுட்ப சேவைசார் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கை தொழில்நுட்பச் சேவைசார் கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 ஆட்சேர்ப்புக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பதவிகள் :

**அட்டவணை இல. 1**

| தொடர் இல. | பதவிப் பெயர் | | நிரப்பப் படவுள்ள வெற்றி டங்களின் எண் ணிக்கை | ஆட் சேர்ப்புத் தரம் |
|---|---|---|---|---|
| 1 | கட்டிட மேற்பார்வை யாளர் | கொழும்பு தலைமை அலுவலகத் தில் மாத்தி ரமே வெற் றிடம் நிலவும் பதவிகளா கும். சேவைக் காலம் முழுவதும் தலைமை அலுவலகத் திலேயே சேவையாற்ற வேண்டும். | 01 | III ஆம் தரம் |
| 2 | போக்குவரத்து உத்தியோ கத்தர் | | 01 | III ஆம் தரம் |

1.2 பதவிக்குரிய கடமைகளின் தன்மை :

**அட்டவணை இல. 2**

| தொடர் இல. | பதவிப்பெயர் | கடமைகளின் தன்மை/ பிரதான அலுவல்கள் |
|---|---|---|
| 1 | கட்டிட மேற்பார்வை யாளர் | 1. வருடாந்த கட்டிடப் பராமரிப்புத் திட்டத்தைத் தயாரித்தல்<br>2 கட்டிடப் பராமரிப்புச் செயல் முறையை முகாமைத்துவத்திற்கு முன்மொழிதல்<br>3. ஊழியர் குழுக்களைக் கண்கா ணித்தல்<br>4. பராமரிப்புகளுக்குத் தேவையான மூலப் பொருட்களையும், உபகர ணங்களைக் களஞ்சியப்படுத் தலும், முகாமையும்<br>5. கொடுப்பனவுகளுக்காக அளவீடு செய்தலும், பரிந்துரைகளைப் பெறுதலும் |
| 2 | போக்குவரத்து உத்தியோ கத்தர் | 1. திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்களை ஓட்டுவதற்குத் தகுந்த நிலைமையில் பேணிச் செல்வதற்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதல்<br>2. பழுதுபார்ப்புகளுக்குத் தேவை யான பரிந்துரைகளையும் தொழில் நுட்ப அறிக்கைகளையும் பெற்றுத் தருதல்.<br>3. பழுதுபார்ப்புகளின் பின் வாகனங் களது ஓட்ட நிலைமையைப் பரி சீலித்தல், வாகனப் பராமரிப்புப் பற்றி பரிசீலித்தல்<br>4. சாரதிகளுக்கு ஆலோசனை வழங் குதல்<br>5. வாகன விபத்துக்களின்போது உடனே பரிசோதித்து அறிக்கைச் சமர்ப்பித்தல், பாவனைக்குதவாத பழுதடைந்த வாகனங்களைக் கழித்து விடுதல் போன்ற நடவடிக் கைகள்<br>6. சுற்றாடல் தூய்மைசார் சான்றித ழைப் பெற்றுக்கொள்ள வாகனங் களைத் தயாராக்குதல். |

2. நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத் திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

**அட்டவணை இல. 3**

| தரம் | சம்பளப் படிமுறை | ஆரம்ப மாதச் சம்பளம் |
|---|---|---|
| III ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885 (MN - 3 - 2006A) | ரூபா 15,005 |
| II ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885 (MN - 3 - 2006A) (சம்பளப்படி 12 இல் இருந்து ஆரம்பம். | ரூபா 17,485 |

| தரம் | சம்பளப் படிமுறை | ஆரம்ப மாதச் சம்பளம் |
|---|---|---|
| I ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885 (MN - 3 - 2006A) (சம்பளப்படி 23 இல் இருந்து ஆரம்பம். | ரூபா 21,045 |

*4. **நியமன நியதிகள்**.-* இப்பதவி நிரந்தரமானதும் ஒய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் மூன்றாண்டு கால தகுதிகாண் நிலைக்கு உள்ளாக்கப்படும். பதவிகள் கொழும்பு தலைமை அலுவலகத்தில் நிலவும் பதவிகள் என்பதால் சேவைக்காலம் முழுவதும் தலைமை அலுவலகத்திலேயே சேவையாற்ற வேண்டும். நியமனங்கள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவி நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

**5. தகைமைகள் :**

*5.1 அடிப்படைத் தகைமைகள் :*

(அ) ஓர் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) விண்ணபப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிப்பவர்களுக்கு இவ்வுயர் வயதெல்லை ஏற்புடையதல்ல.)

*5.2 கல்வித் தகைமைகள் :*

(அ) மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதேனும் ஒரு பாடம் உள்ளடங்கலாக நான்கு (4) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் மொத்தம் (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அத்துடன்

(ஆ) இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (3) விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

கட்டிட மேற்பார்வையாளர் மற்றும் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் மேற்காணும் 5.1 மற்றும் 5.2 தகைமைகளுக்கு மேலதிகமாகக் கீழ்க்காணும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும் :

(1) கட்டிட மேற்பார்வையாளர் :

(i) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ் (சிவில்) மூன்றாண்டு பகுதி நேரப் பயிற்சிப் பாடநெறியைப் பயின்றிருத்தல் ;

(ii) தொழில்துறை சார்ந்ததாய் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 அல்லது 6 ஆம் மட்டத் தகைமைகளைப் பூரணப்படுத்தியிருத்தல்.

(2) போக்குவரத்து உத்தியோகத்தர் :

(i) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ் (இயந்திரவியல்) மூன்றாண்டு பகுதி நேரப் பயிற்சிப் பாடநெறி பயின்றிருத்தல் ;

(ii) தொழில் துறை சார்ந்ததாய் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 அல்லது 6 ஆம் மட்டத் தகைமைகளைப் பூரணப்படுத்தியிருத்தல்.

மேலே (1) மற்றும் (2) இல் குறிப்பிடப் பட்டுள்ள தொழில்சார் தகைமைகளைப் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக இயந்திரவியல் துறையிலும், கட்டிட மேற்பார்வையாளர் பதவிக்காக சிவில் துறையிலும் கீழ்க்காணும் நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றிருத்தல் வேண்டும் :

(அ) மொறட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ;

அல்லது

(ஆ) தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப் படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா பாடநெறி ;

அல்லது

(இ) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சி னால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா பாடநெறி ;

அல்லது

(ஈ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ;

அல்லது

(உ) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சையின் I ஆம் பாகத்தை வெற்றிகரமாகப் பூரணப் படுத்தியிருத்தல் ;

அல்லது

(ஊ) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப் பிட்ட தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றை விசாரித்துக் கருத்தறிந்த பின் மேற் காணும் தொழில்நுட்பத் தகைமை யுடனும் சகலவிதத்திலும் சமமானதென பொது நிருவாக மற்றும் உள்நாட்ட லுவல்கள் அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படும் வேறு தொழில் நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

*5.3 உடல்சார் தகைமைகள்.-* ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றவும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும், போதிய உடல் ரீதியானதும், மனோரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**குறிப்பு.-** சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய தகைமைகள் அனைத்தையும் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

6. **பொய்யான தகவல்களை வழங்குதல்.-** இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் விண்ணப்பதாரருக்கு தகைமைகள் இல்லையென்பது வெளிப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னரெனின் விண்ணப்பதாரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவலை அவர் அது பிழையெனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனுமொரு முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது தென்பட்டாலோ அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

7. **பரீட்சை முறை.-** இப்பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்துப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| பாடம் | பெறக்கூடிய முழுப்புள்ளிகளின் அளவு | சித்தி எய்தப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளியின் வீதம் | காலம் |
|---|---|---|---|
| I நுண்ணறிவு | 100 | 50% | 1 மணித்தியாலம் |
| II தொழில் நுட்ப வினாத் தாள் | 100 | 50% | 2 மணித்தியாலங்கள் |

7.1 பாட விதானம் :

(i) நுண்ணறிவு.- பரீட்சையின் பகுத்தறிவு பூர்வமாகச் சிந்திக்கும் ஆற்றல், ஆய்வுத்திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைப் பரீட்சிக்கும் நோக்குடனான வினாக்களுடன் உருவாக்கப்பட்டதாய் அமையும் ;

(ii) தொழில்நுட்ப வினாத்தாள் -
கணிதம் :
அட்சர கணிதம் (சமனிலிகள், மாறிகள், தொடர்கள், மடக்கைகள்)
திரிகோணமானம் (சமவலுச் சமன்பாடுகள், முக்கோணங்களைத் தெளிவாக்குதல்)
புள்ளிவிபரவியல் (இடை, ஆகாரம், நியம விலகல், நிகழ்தகவு)

பௌதீகவியல் :
ஒளியும் ஒளியியலும் (தெறிவும், முறிவும், சமதள ஆடிகள், வளைந்த பரப்புக்கள், அரியம், கண்ணாடி வில்லைகள், ஒளியியல் சூத்திரம், நுணுக்குக்காட்டிகள், தொலைகாட்டிகள்), நியுற்றனின் நிலையியக்கவியல் (எண்ணளவுகளும் காவிகளும், நியுற்றனின் இயக்க விதிகள், இயங்குவிசை)

நானாவித விடயங்கள் :
புவிச்சரிதவியலின் அறிமுகம் (பூமியின் வடிவம், பிரதேசவியல் போன்றன) திண்மப் பதார்த்தங்களின் கோணப்பார்வை, எறியங்களின் பெறுமதி, நிலஅளவைத் திணைக்களத்தால் தயாரிக்கப்படும் தேசப்படங்கள்.

8. **தெரிவு முறை :**

8.1 நிலஅளவையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களிடையே நிரப்புவதற்கு உத்தேசிக்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமனான விண்ணப்பதாரர்களது தொகை பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டு இரண்டாவதாக பதவிகளுக்கான விருப்பத் தெரிவு வரிசைக் கிரமம் கவனத்தில் கொள்ளப்பட்டு இவ்விரண்டுக்கும் அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

8.2 தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. **ஆட்சேர்ப்பு.-** பயிற்றுவிக்கும் தரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனம் மூலம் நடாத்தப்படும் இரண்டு வருட தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாய் பூரணப்படுத்தியபின் தொழில்நுட்பச் சேவையில் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

10. **விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் :**

(அ) இவ்வறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப 21 x 29 செ. மீ. (ஏ4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரர்கள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். இல. 1 முதல் 4 வரையான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும், இல. 4.1 முதல் 10.1 வரையான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும், இல. 10.2 முதல் 11.1 வரையான தலைப்புக்கள் 3 ஆம் பக்கத்திலும், இல. 12 முதல் 14 வரையான தலைப்புக்கள் நான்காம் பக்கத்திலும், இல. 15 ஆம் தலைப்பு ஐந்தாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையின்கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின்கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றைத் தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) உரிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக இல்லாத, உரிய தினத்திற்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்திசெய்யப்படாமல் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் விளைவுகளை விண்ணப்பதாரர்

களே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கின்றதா என விண்ணப்பதாரர் கவனித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதென அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படும் எதுவித முறைப்பாடுகளும் கவனத்தில்கொள்ளப்பட மாட்டாது.

**முக்கிய குறிப்பு**.- பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த பரீட்சை நிலையத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

10.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்திருப்பார்கள் எனும் முன் அனுமானத்தில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்தன்றோ அல்லது அத்தினத்திற்கு முன்னரோ விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற நிலஅளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்குத் தோற்றவோ அல்லது இப்பதவிக்கான தகைமை உள்ளவர் என ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவோ கருதப்படக் கூடாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாகத் தகைமைகள் கொண்டவரெனப் பரிசீலிக்கும் வேளையில் தேவையான தகைமைகள் இல்லையென வெளிப்படுமானால் அவரது பரீட்சார்த்தி உரிமை பறிக்கப்படும்.

10.2 விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப சேவைகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

10.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நொத்தாரிசு, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்தில் உள்ள அதிகாரிகள், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் அல்லது பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 06/2006 இன் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களிலுள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்த வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 800 ரூபா ஆகும். இத்தொகையைக் கொழும்பு 5, கிருல வீதி, இல. 150 இல் அமைந்துள்ள நிலஅளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**.- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2014.11.27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாய் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்,
நிலஅளவைத் திணைக்களம்,
த. பெ. இல. 506,
கொழும்பு.

13. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

14. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரம் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கெனப் பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
(ii) தபால் அதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அஞ்சல் அடையாள அட்டை ;
(iii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நிலஅளவையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியில் காணப்படும் பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளக் கட்டுப்பட்டுள்ளனர்.

பீ. எம். பீ. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

நிலஅளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

[ ]
(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

1. பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையம் :

| | |
|---|---|
| கொழும்பு | |
| தியத்தலாவை | |
| அநுராதபுரம் | |

பரீட்சைக்குத் தோற்ற உத்தேசிக்கும் நிலையத்தின் பெயர் குறித்த கூட்டினுள் ✓ அடையாளத்தையும், ஏனைய இரு கூடுகளுக்குள்ளும் X அடையாளத்தையும் இடவும்.

2. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் :
(சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

3. ஆட்சேர்ப்புக்கான பதவிகளிடையே நியமனம் பெற விரும்பும் பதவிகளின் ஒழுங்குவரிசை மிகக் கூடிய விருப்பமுள்ள பதவிக்கு இலக்கம் 1 ஐயும் விருப்பம் குறையும் ஒழுங்குவரிசைக்கமைய மற்றைய பதவிக்கு 2 ஐயும் குறிப்பிடவும்.

பதவிப் பெயர் விருப்பு இல.

(1) கட்டிட மேற்பார்வையாளர்

(2) போக்குவரத்து உத்தியோகத்தர்

4. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

4.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

5. தேசிய அடையாள அட்டை இல. :----.

6. பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

6.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7. பால் : (ஆண் - M, பெண் - F)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

8. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----.

8.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்) :
மாவட்ட இலக்கம்

மாவட்டத்தின் பெயர்

8.2 எப்போதிலிருந்து அம்மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள் ? : ----.

9. தொலைபேசி இலக்கம்:

நிலையான:----.
கையடக்க:----.

10. கல்வித் தகைமைகள்:

10.1 க.பொ.த. (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள் :
முதலாவது அமர்வு:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

**குறிப்பு**.- பெறப்பட்டுள்ள அதியுயர் தரத்திலிருந்து தொடங்கி தர ஒழுங்கில் பாடங்களைக் குறிப்பிடவும்.

10.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரங்கள்:
இரண்டாவது அமர்வு:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

**குறிப்பு**.- பெறப்பட்டுள்ள அதியுயர் தரத்திலிருந்து தொடங்கி தர ஒழுங்கில் பாடங்களைக் குறிப்பிடவும்.

10.3 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள்:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

11. நீர் குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :-

ஆம் இல்லை

11.1 ஆம் எனில் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :----.

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் ? :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.

13. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யான தென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக்

கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) .......................... ரூபா செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஈ) மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பான நிலஅளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

(உ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**14. விண்ணப்பதாராின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................................................. என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளேன் எனவும் அவர் .................. ஆம் திகதி என் முன்னிலையில் மேலே 13 ஆம் பந்தியின்கீழ் கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கின்றேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:----.
பதவிப் பெயர்:----.
முகவரி----.
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)
திகதி:----.

**15. திணைக்களத் தலைவரின் பரிந்துரை:**
(அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்ப தாரர்களுக்கு மாத்திரம்)

15.1 உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவைக்கமைய விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள் வேலை, நடத்தை, வரவு திருப்தியானது/திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/ உழைக்கவில்லை எந்தவோர் ஒழுக் காற்றுத் தண்டனைக்கும் உள்ளாகவில்லை/ உள்ளாகி யுள்ளார்.

15.2 விண்ணப்பிப்பவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப் பட்டால் தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/ விடுவிக்கப்பட முடியாது. இவ்விண்ணப்பப் படிவத்தினை சிபாரிசு செய்கிறேன்./ செய்யவில்லை.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி முத்திரை:----.
திகதி:----.

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 8 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ்வட்டவணை தொடர்புடையது.

| நகரங்கள்/மாவட்டங்களின் பெயர்கள் | நகரங்களின்/மாவட்டங்களின் இலக்கங்கள் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலன்னறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

10-961

---

**சுகாதார அமைச்சு**

மருத்துவ தேவைக்காக நிறைவுகாண் சேவைக்கு முன் ஆரம்ப பயிற்சி பாடத்திற்காக சுகாதாரப் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2014

சுகாதார அமைச்சின் மருத்துவ தேவைக்காக நிறைவுகாண் சேவையில் கீழ்வரும் பாடநெறிகளுக்காக தேசிய பல்கலைக்கழகம் ஒன்றின் மூலம் சுகாதாரப் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ஒவ்வொரு பயிற்சிப் பாடத்திற்கமைய கீழ்க்குறிப்பிடப்படும் பட்டத்தை பூர்த்திசெய்த வருட (பட்டம் செல்லுபடியாகும் திகதி) அடிப்படைக்கேற்ப தயாரிக்கப்படும் ஒவ்வொரு பயிற்சி நெறிக்கு பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படுவர். வெற்றிடங்களைவிட விண்ணப்பித்துள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படின் பயிற்சிக்காக பொது அறிவு மற்றும் உளச்சார்பு சம்பந்தமாக ஒரு மணித்தியால போட்டிப் பரீட்சை ஒன்று நடைபெறும். போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் நிலையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் முன்னுரிமை அட்டவணையின் மூலம் ஒவ்வொரு பாடநெறிக்கும் தெரிவுசெய்யப்படுவர்.

2. **பதவிக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

| குறியீட்டு இல. | முன் ஆரம்ப பயிற்சி பாடநெறி | பூர்த்திசெய்யப்படவேண்டிய பட்டம் |
|---|---|---|
| 1. | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர் | விஞ்ஞானமாணி மருத்துவ இரசாயனவியலாளர் (BSc.MLT) |
| 2. | மருந்தாளர் | மருந்தாளர் (B Pham) மருந்தாளர் (விசேடம்) (BSc. (Pharmacy) Special) |
| 3. | உடற்கூறு சிகிச்சை | உடற்கூறு சிகிச்சையாளர் (BSc. Physiotherapy) |
| 4. | கதிரியக்கவியல் | கதிரியக்கவியலாளர் (BSc. Radiotherapy) விஞ்ஞானமாணி கதிரியக்கவியலாளர் (BSc. Radiography) |

3. **வேறு பொதுத் தகைமைகள்.**- (அ) 2014.11.28 ஆந் திகதியன்று 18 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவராயிருத்தல்.

(ஆ) பட்டம் செல்லுபடியாகும் திகதி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக இருத்தல் வேண்டும்.

(இ) உடல் உள திடகாத்திரமுடையவராக இருத்தல்.

(ஈ) விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் 3 வருடங்கள் வதிவிடத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

4. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைவாக ஏ4 அளவு கொண்ட தாளில் 1-9 வரை முதல் பக்கத்திலும் 10-13 வரையான விபரங்களை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்குவதற்கு ஏற்ற முறையில் விண்ணப்பங்களைத் தயாரிக்கவும்.

(ஆ) விண்ணப்பத்தில் ''பற்றுச்சீட்டு'' எனும் இடத்தில் இலங்கை வங்கி, தெப்ர பேன், இல. 7041318 "சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் 300 ரூபாவை வரவு வைத்து பற்றுச்சீட்டைக் கழற்ற முடியாத வகையில் ஒட்ட வேண்டும். (பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளவும்).

(இ) அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்/பொலிஸ் சேவை உத்தியோகத்தர்/வருடாந்த சம்பளமாக 2,75,220 ரூபாவுக்கு குறையாமல் சம்பளம் பெறுகின்ற நிரந்தர ஓய்வூதிய சம்பளத்திற்குரிய பதவியைக் கொண்ட அரச உத்தியோகத்தரால் இவ்விண்ணப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 9" x 4" அளவுள்ள தபால் உறையில் இட்டு தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''நிறைவுகாண் சேவைக்கு முன் ஆரம்ப பயிற்சிப் பாடத் திற்காக சமனான சுகாதாரப் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2014'' குறிப்பிட்ட கல்வியாண்டையும் பட்டத்தையும் குறிப்பிட்டு, ''பணிப்பாளர், நிருவாகம் - 2, சுகாதார அமைச்சு, 'சுவசிரிபாய', இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10'' எனும் முகவரிக்கு 2014.11.28 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(உ) இதுவரையில் தற்காலிக அடிப்படையில் சுகாதார அமைச்சின் நிர்வாகத்திற்குட்பட்ட நிறுவனங்களில் சேவை புரியும் பட்டதாரிகளும் நிரந்தர நியமனத்தைப் பெற எதிர்பார்ப்பவர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கமைய விண்ணப்பிக்க வேண்டும்.

5. அரச அல்லது மாகாண அரச நிறுவனங்களில் கடமை யாற்றுபவர்கள் அவர்களது திணைக்களத் தலைவர்கள் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். அதேபோன்று இது வெளிவாரியான ஆட்சேர்ப்பாவதுடன், குறித்த பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திசெய்யாத அல்லது முடியாதவிடத்தோ தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் இணைய முடியாதென்பதை கவனத்தில் கொள்ளவும்.

6. விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது. அத்துடன் உரிய தினத்திற்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இவ்வறிவித்தலுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்வதற்காக போட்டிப் பரீட்சை ஒன்று நடாத்தப்படாவிடின் பட்டம் செல்லுபடியாகும் திகதியின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியல் முறையின் செயற்பாட்டைக் கொண்டு தெரிவு செய்யப்படுபவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு இணைத்துக் கொள்ளப்படுவர். பட்டம் பெற்ற திகதியின் அடிப்படையில் தெரிவு செய்வது சிக்கல் நிலவும் வேளையில் சிறப்பு பொது மதிப்பீடு (GPA) அடிப்படையில் தெரிவுசெய்தல் நடைபெறும். இணைத்துக்கொள்ள போட்டிப் பரீட்சை நடைபெறுமாயின் இதில் பெற்றுக்கொண்ட நிலை அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை அட்டவணையின் மூலம் ஒவ்வொரு பாடநெறிக்கும் தெரிவுசெய்யப்படுவர். விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) பட்டச் சான்றிதழின் உண்மைப் பிரதி (இவ்விண்ணப்பத்துடன் பட்டச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும்.) ;

(இ) க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேறு களின் உண்மைப் பிரதி ;

(ஈ) அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் ;

(உ) மேலே 3(ஈ) இல் குறிப்பிடப்பட்டபடி உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் ஒப்பத்துடன் கிராம சேவையாளரின் சான்றிதழ்.

8. **பயிற்சியளிக்கும் முறை :-**

| குறியீட்டு இல. | பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சிக் காலம் | பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் மொழி |
|---|---|---|---|
| 01 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவிய லாளர் | 6 மாதம் | ஆங்கிலம் |
| 02 | மருந்தாளர் | 6 மாதம் | ஆங்கிலம் |
| 03 | உடற்கூற்று சிகிச்சையாளர் | 6 மாதம் | ஆங்கிலம் |
| 04 | கதிரியக்கவிய லாளர் | 6 மாதம் | ஆங்கிலம் |

(i) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் அவ்வப்பாடநெறிகளுக்காக உரிய பயிற்சி பாடசாலைகளில் இணைத்துக்கொள்ளப்படுவர். பாடநெறி ஆங்கிலத்தில் நடாத்தப்படும்.

(ii) பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளின் சட்டதிட்டங்களுக்கும் சுகாதார அமைச்சின் கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(iii) பயிற்சிக்கால முடிவில் சித்தியடையாதவர்களும் நடத்தையில் திருப்தியற்றவர்களினதும் பயிற்சிப் பாடசாலையின் நிபந்தனைகளை ஏற்க மறுக்கின்றவர்களினதும் பயிற்சி எந்நேரத்திலும் எவ்வித நட்டஈடுமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படும்.

(iv) பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்காலத்தில் 12,360 ரூபா மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும்.

(v) பயிற்சிக்காக இணைந்த பின்பு பயிற்சிநெறியை இடைநடுவில் கைவிடாமலும் பயிற்சி முடிவில் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் 5 வருட காலத்திற்கு உரிய மாகாண சபை, மத்திய அரசின் கீழுள்ள வைத்தியசாலைகளில் அல்லது சுகாதார திணைக்களத்தில் சேவையாற்றுவதுடன் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்பந்தத்திற்கும் பிணைக்கும் உடன்படுவதுடன் பயிற்சிக்காலத்தில் பயிற்சியிலிருந்து நீங்கிக்கொண்டாலோ பயிற்சியைக் கைவிட்டாலோ மேலே (iii) இன்படி பயிற்சியை இடையில் முடித்துக் கொண்டாலோ அல்லது குறித்த 5 வருட காலப்பகுதியில் சுகாதார திணைக்களத்தின் உரிய பதவியில் சேவையாற்ற மறுத்தாலோ பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவும் அரசினால் செய்யப்பட்ட செலவும் பிணைக்குரிய முதலும் அவர்களால் சுகாதார சேவை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். இல்லாவிடின் இச்செலவை தாங்கள் ஒப்பந்தத்தின்படி சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்.-** பயிற்சி முடிவில் பதவியில் நிரந்தர நியமனம் செய்தல்/செய்யாமல் விடும் தீர்மானம் அச்சந்தர்ப்பத்தில் உள்ள பதவி வெற்றிட அளவினை பொறுத்ததாகும். அதன்படி பதவியில் நிரந்தர நியமனம் செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்தால் விண்ணப்பதாரி பயிற்சி பெற்ற பாடநெறிக்கு குறித்த பயிற்சி நெறியின் நிபந்தனை மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் குறித்த பதவியில் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட குறியீட்டு இல. 1, 2, 3, 4 இல் குறிப்பிடப்பட்ட நிறைவுகாண் மருத்துவ சேவையின் பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (iv) ரூபா 15,440 - 5 x 180 - 5 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 28,260 ஆகிய சம்பளத் திட்டம் உரித்தாவதுடன் III ஆம் தரத்திற்குரிய ஆரம்ப சம்பளப் படியில் வைத்து சம்பளம் செலுத்தப்படும்.

10. விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விவரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும்போதும் நியமனம் பெற்ற பின்பும் மோசடியாகத் தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் என நிரூபனமாகும்போதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் இவ்விடயத்தை சட்ட நடவடிக்கைக்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதுடன் அந்நியமனம் இரத்துச்செய்யப்பட்டு பயிற்சியும் பதவியும் நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன் மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் (Black List) அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு அரசினால் வழங்கப்பட்ட பணம், பிணைக்காலத்திற்குரிய பணம் என்பன அறவிடப்படும்.

11. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய பாடநெறியில் பயிற்சி பெறுவதோடு நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு உடல் உள தகுதியைக் கொண்டதோடு பயிற்சியின் முதலாவது மாதத்தின் வைத்திய பரிசோதனையில் உடற்தகுதியற்றவராக காணப்படுவாராயின் பயிற்சி அமர்வுக்கு பொருத்தமற்றவராக தீர்மானிக்கப்படும்.

12. மேற்படி இணைத்துக்கொள்ளப்பட்ட சகலரும் அரச சேவைக்குரிய சகல சட்டதிட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிர்வாக சுற்றறிக்கை பிரமாணங்களுக்கும், சுகாதார சேவைத் திணைக்களத்திற்குரிய கொள்கைகளுக்கும், நிதிச் சட்ட பிரமாணங்களுக்கும் வேறு சட்டங்களுக்கும் அரசினால் காலத்திற்கு காலம் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் கட்டுப்படுதல்.

13. பயிற்சிக்கு இணைத்துக்கொள்வது தொடர்பில் இவ்வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தெளிவான மற்றும் தெளிவற்ற விடயங்கள் தொடர்பாக உருவாகும் பிரச்சினைகளுக்கு உடன்பாடு தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி அறிவித்தலே செல்லுபடியாகும்.

14. பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிக் கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்படவில்லை. அவ்வாறு வழங்குமானால் அது தொடர்பாக மதிப்பீட்டு வீட்டுக்கூலி, நீர் மற்றும் மின்சாரம் போன்றவற்றிற்கு கட்டணம் அறவிடப்படும்.

சுதர்மா கருணாரத்ன,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2014, ஒற்றோபர் 8.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மருத்துவ தேவைக்காக நிறைவுகாண் சேவைக்கு முன் ஆரம்ப பயிற்சிப் பாடத்திற்காக சுகாதாரப் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2014**

| பாடநெறி குறியீட்டு எண் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய |
|---|
| |

விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்யும் முன் வர்த்தமானி அறிவித்தலை நன்கு வாசிக்கவும்.

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/தமிழில்) :----.
* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :----.

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
(உதாரணம் - A. B. C. Silva)
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. தபால் முகவரி :

சிங்களத்தில்/தமிழில் ஆங்கிலத்தில்

............................................ ............................................
............................................ ............................................
............................................ ............................................

4. (அ) நிரந்தர முகவரி :-

சிங்களத்தில்/தமிழில் ஆங்கிலத்தில்

............................................ ............................................
............................................ ............................................
............................................ ............................................

(ஆ) தொலைபேசி இலக்கம் :

தற்காலிக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

நிரந்தர

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(இ) பதிவு மாவட்டம் :-
சிங்களத்தில்/தமிழில் :................................................
ஆங்கிலத்தில் :................................................

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் பதிவுசெய்தவரா ? ஆம்/இல்லை :................................................

(உ) ஆம் எனின், எவ்வளவு காலம் ? :......................................

5. பிறந்த திகதி :

ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

2014.11.28 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. பால் (பெண்/ஆண்) :

பெண் ☐ ஆண் ☐

(குறித்த கூட்டினுள் ✓ அடையாளமிடுக.)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா ?

ஆம் ☐ இல்லை ☐

(குறித்த கூட்டினுள் ✓ அடையாளமிடுக.)

8. விவாகமானவர்/விவாகமாகாதவர் :

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

(குறித்த கூட்டினுள் ✓ அடையாளமிடுக.)

9. கல்வித் தகைமை :-

| | பெற்ற பட்டம் | தரம் | சிறப்பு பொது மதிப்பீடு | பல்கலைக் கழகம் | கல்வி ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |

10. நீங்கள் ஏதேனும் குற்றத்தின் பேரில் நீதிமன்றில் குற்றவாளியாக் கப்பட்டுள்ளீர்களா ?

ஆம் ☐ இல்லை ☐

(குறித்த கூட்டினுள் ✓ அடையாளமிடுக.)

ஆம் எனின், விளக்குக :.........................................................

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) வர்த்தமானி அறிவித்தலை பூரணமாக வாசித்து விளங்கிக் கொண்டதன் பின்னர் அதன் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்யப்பட்டதுடன், நான் வேறேதும் முழு நேர பாடநெறியையும் தொடரவில்லை எனவும் இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் நான் அறிந்தவரையில் உண்மை யானது, சரியானது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட இந்த பிரகடனம் மற்றும் விண்ணப்பப் படிவத்தில் அடங்கியுள்ள ஏதேனும் தகவல்கள் பிழையானது என தெரியவருமிடத்து பயிற்சிக்கு நான் தகுதியற்றவ ராவதுடன் நியமனம் வழங்கப்படின் அதன் பின்னர் அது நிரூபிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

(இ) அதேபோன்று இது வெளிவாரியான ஆட்சேர்ப்பாவதுடன் எனக்கு குறித்த பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திசெய்ய முடியும் அல்லது முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் இணைய முடியாதென்பதை நன்கு அறிவேன்.

| |
|---|
| பற்றுச்சிட்டு<br>ரூபா 300 |

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :**

இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ ஐ நான் தனிப்பட்ட முறையில்

அறிவேன் எனவும் என் முன்னிலையில் அவரது கையொப் பத்தை .......................................... ஆந் திகதி வைத்தார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
உறுதிப்படுத்தும் அதிகாரியின் பதவி முத்திரை :
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

13. **விண்ணப்பதாரி அரச ஊழியராயின்/மாகாண சுகாதார ஊழியராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(i) மேற்குறித்த விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி ............................................. இத்திணைக்களத்தில் ......................................................... பதவியில் பதவி வகிக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்து வதுடன் இப்பதவி தொடர்பாக தெரிவுசெய்யப்படின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் தெரிவிக்கிறேன்.

(iii) அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பாவதுடன் அவர் குறித்த பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ய முடியும் அல்லது முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் இணைய முடியாதென்பதை அவர் நன்கு அறிவார்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :----.
திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

10-1029